மண்டபம் என்ற பெயராலும், பழுதடைந்த கோயில்கள் என்ற பெயராலும் வருடத்தில் ஒரு நாள் அல்லது இருநாள் திருவிழா என்று எடுத்து, பல ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் பெறு கிருர்கள். அது கணக்கில் காட்டப்படுவதில்லே. அம்மாதிரியான நடவடிக்கைகளே தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, யார் ஏமாற்று வேலே செய்தாலும், அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானுல், அதில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி : தலேவரவர்களே, பல கோயில்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்தும், அந்த வருமானத்தைக் கோயிலுக்குக் கொடுக்காமல், சில தனிப்பட்ட நபர்கள் அனுபவித்துக் கொண் டிருக்கிருர்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளேத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, இப்படிப் பட்ட நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படு மானுல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Ex-servicemen in Tamil Nadu

* 210. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any census of Ex-servicemen has been taken in this State; and

(*b*) if so, the details thereof, district wise?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாட்டின் முன்னுள் படைவீரர்களின் மொத்த எண்ணிக்கை குறித்த தோராயமான, உடனடிக் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு முப்படை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(இ) இப்பணி முடிவடையவில்லே.

1972 டிசம்பர் 15]

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அவர்களின் சரியான கணக்கை எடுத்து, அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்ய அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே முன்னாள் ராணுவ வீரர்களுக்குப் பல உதவிகளைத் தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பிலே செய்து வருகிறோம். இருந்தாலும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைச் சரியாகப் பார்த்து அவர்களுக்கு எல்லாம் சலுகைகள் அளிக்கவேண்டுமென்று கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தப் பணியை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சரியான கணக்கு வந்த பின்னால், மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, முன்னாள் ராணுவ வீரர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படிக் கஷ்டப்படுகிறவர்களுக்கு "போஸ்" படையைச் சேர்ந்த அதாவது "ஐ.என்.ஏ." படையைச் சேர்ந்தவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படுவதுபோல் பென்ஷன் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு, அவர்கள் பணியாற்றிய ராணுவத் துறையிலிருந்து பென்ஷன் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில் அவர்களில் கை, கால் ஊனமுற்றோர், உடல் ஊனமுற்றோர்களுக்கு—அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக அவர்கள் கடைகள் வைத்து நடத்த, மற்ற தொழில்கள் நடத்த நம்முடைய அரசு உதவி செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]